# விடியல்

## The Dawn

*மாத இதழ், பொழுது – 61*
*மே, 2014*
**பக்கங்கள் - 32, தனிச்சுற்றுக்கு மட்டும்**



*சிறப்பாசிரியர்*
**முனைவர் நா. கண்ணன்**
கல்லூரி முதல்வர்

*ஆசிரியர்*
**முனைவர் மா. கார்த்திகேயன்**
தமிழ்த்துறைத் தலைவர்

*இணை ஆசிரியர்*
**முனைவர் ப. சரவணன்**
தமிழ் உதவிப் பேராசிரியர்

*ஆசிரியர் குழு*
தமிழ் உதவிப் பேராசிரியர்கள்
அனைவரும்



*வெளியீடு:*

*தமிழ்த்துறை*

***கே.எஸ். ரங்கசாமி***
***கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)***
*திருச்செங்கோடு – 637 215,*
*தமிழ்நாடு, இந்தியா.*


*fb: facebook.com/ksrcasthamizh.vidiyal*
*Blog: ksrcasthamizh.blogspot.in*
*Email : vidiyalmagazhine@gmail.com*
*Website: ksrcas.edu*



© ***K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)***

*All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the publisher.*


## *நம்புவோமாக…*

சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியா எனும் ஜனநாயக நாடு பல ஏற்ற இறக்கங்களைச் சந்தித்துவிட்டது. எப்போதும் இல்லாத அளவிற்கு மிகுந்த எதிர்பார்ப்புடனும் பரபரப்புடனும் இந்த நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிவுற்றது. ஏப்ரல் 24 இல் கருப்பு மை ஏந்திய விரல்கள் ஏதோ ஒரு லட்சியக் கனவுகளுடன் இயங்கியதைப் பார்க்க முடிந்தது. உண்மையில் நமது நாட்டின் மீதான அக்கறை மக்களுக்கு எந்த அளவில் இருந்தது என்பதைத் தேர்தலுக்கு முந்தைய நாள் ஒவ்வொரு பேருந்து நிலையங்களும் சான்று பகன்றன.

ஒவ்வொரு ஐந்தாண்டுகளும் மக்களின் நம்பிக்கையைச் சுமந்த படிதான் பயணிக்கின்றன. பொறுத்திருந்து பார்ப்போம்.. குடிமக்களாக நமது கடமையைச் செய்திருக்கிறோம். இனி ஆள்பவர்கள் கையில்தான் அனைத்தும்.. நல்லதே நடக்கும் என இனியும் நம்புவோமாக..

***வாசகர்களே! இவ் இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துகளையும் அறிவுரைகளையும் எங்களுக்குத் தெரிவித்து உதவுக.***

- ஆசிரியர்

# உள்ளடக்கம்

## கட்டுரைகள்


உலகப் புத்தக தினம் 05
ஓரெழுத்தொருமொழி 07
ஆரோக்கியம் - தூக்கம் 10
நோபல் பரிசு பெற்ற பெண்மணிகள் 16
பாண்டிய நாட்டில் பிற நாட்டவர் ஆட்சி 18
இந்தியாவில் வங்கிகளின் வளர்ச்சி 21
தமிழும் அறிவியலும் 26
அறநெறிச்சாரல் - 1 27


## கவிதைகள்


பொங்கு ஆனால் எழாதே! 03
உயர்வு 04
நடிப்பில்லாத துடிப்பு..! 04
தோள் கொடுப்பான் தோழன் 04
பிறப்பு 06
கல்லூரி நாட்கள் 12
உறைக்கட்டும் 13
தாய்மையின் வலி 16
புன்னகை 21
பெற்றமனம் 23
கடந்த காலம் 24
நிறங்கள் 24
கல்லூரிக் காலம் 24
மூச்சுக்காற்று 25
உழைப்பாளர் நாள் 26
விவசாயி 29
அழகு 30
ஞாபகங்கள் 30
நல்லவன் 28


## தகவல் களஞ்சியம்


கடைசி வார்த்தைகள் 03
கானகம் அழிந்தால் 06
நெப்போலியனிடம் கம்பராமாயணம் 06
கண்ணால் சாப்பிடும் உயிரினம் 06
பாங்க் 07
வெற்றியின்வழிகள் 07
மிகச்சிறிய குரங்கு 07
இ-மெயிலைக் கண்டுபிடித்த தமிழர் 08
நம்பவே முடியல 11
டுவிட்களம் 14
செய்தி சொல்லும் சங்க நூல்கள் 25
அன்றும் இன்றும் 30
பொது அறிவு 29
இந்தியரயில்வே மண்டலங்கள் 18

## கடைசி வார்த்தைகள்...!

மனிதர்களின் வாழ்க்கைக்குப் பின்னும் அவர்களின் வார்த்தைகள் இன்றளவும் பேசப்பட்டு வருகின்றது. அவ்வகையில் உலக அளவில் பிரபலமான சிலர் உதிர்த்த கடைசி வார்த்தைகள்..

- ❖ *அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர்* ***மெய்ப்பொருள் நாயனார்*** *-தத்தா நமர்*
- ❖ *கல்விக் கண் திறந்த* ***காமராசர்*** *- வைரவா(உதவியாளர்) விளக்கை அணைத்து விடு*
- ❖ *கறுப்பு நிற முதல் உலக அழகி* ***கிளியோபாட்ரா*** *– ஆஹா இதோ என் முடிவு இங்கே இருக்கிறது*
- ❖ *இசை மேதை* ***பீத்தோவன்*** *- நண்பர்களே கைதட்டுங்கள் இந்த நகைச்சுவை நாடகம் இத்துடன் முடியப் போகிறது*
- ❖ *இங்கிலாந்து இளவரசி* ***டயானா*** *- கடவுளே! என்ன நடந்தது எனக்கு?*
- ❖ *இந்திய தேசப்பிதா மகாத்மா* ***காந்தியடிகள்*** *- "ஹேராம்"*
- ❖ *உலகப் புகழ்* ***ஜுலியஸ் சீசர்*** *- யூ டு புரூட்டஸ்?*
- ❖ *மின்சாரம் உள்ளிட்ட ஏராளமான பொருள்களைக் கண்டறிந்த* ***தாமஸ் ஆல்வா எடிசன்*** *- விளக்கை எரிய விடுங்கள் என் ஆத்மா பிரியும் போது வெளிச்சம் இருக்கட்டும்*
- ❖ *ரேடியம் கண்டறிந்தவர், இரு முறை நோபல் பரிசு பெற்றவர் :* ***மேரி கியூரி*** *- என்னைத் தனிமையில் இருக்க விடுங்கள்*
- ❖ ***பெஞ்சமின் பிராங்களின்*** *- இறக்கும் மனிதனால் எதையும் எளிதாகச் செய்ய முடியாது.*

***முனைவர் மா.கார்த்திகேயன்***
***தமிழ்த்துறைத் தலைவர்***

## பொங்கு ஆனால் எழாதே!

*எட்டிப் பார்த்தால் எதிரிகள்*
*கூட்டமாம்*
*கவச வண்டிகள்*
*கண்காணிக்கின்றன..*
*தொட்டுப்பார்த்தால் துரோகக்*
*கும்பலாம்*
*தேசப்படங்கள் தெரிவிக்கின்றன..*
*கைகளை உயர்த்துபவர்*
*கலவரக்காரராம்*
*கட்சிக்கொள்கைகள்*
*எடுத்துரைக்கின்றன..*
*குனிந்து நடப்பதே தேசபக்தியாம்*
*குமுறி எழுந்தால் நாசசக்தியாம்*

உலையில் அரிசிதான் பொங்க
வேண்டுமாம்
ஊரில் யாரும் பொங்கக் கூடாதாம்..
தமிழனே!
அகராதி ஒன்று புதிதாய் வாங்கு
அர்த்தம் தெரிந்த பின்
அமைதியாய் தூங்கு..

**எ.கோகுல் ராஜு**
உயிர் வேதியியல்
இளங்கலை இரண்டாமாண்டு

## உயர்வு

நிலா தூரம் தான்
அதில் காலடி வைக்கும் வரை..
மலை உயரம் தான்
அதன் உச்சியைத் தொடும் வரை..
லட்சியம் எட்டாக் கனிதான்
அதை நீ அடையும் வரை..
தோல்விகள் துன்பம் தான்
வெற்றியைக் காணும் வரை..
ஆம்!
உதிரும் இலைகள்
வசந்த காலம் வரை தான்
தாழ்வும் சோர்வும்
நீ விழிக்கும் வரை தான்..
தேடு எங்கும் தேடு
திரவியம் கிடைக்கும் வரை
தேடு தேடு..!

**மு.மதுமதி**
தமிழ்-இளங்கலை இரண்டாமாண்டு

## நடிப்பில்லாத துடிப்பு..!

உனக்காக துடித்த ஓர் இதயம்
உனக்காக மட்டுமே துடித்த ஓர்
இதயம்
இரத்தத்தை உனக்காகப் பரிமாறிய
ஓர் இதயம்
நீ கேட்டதெல்லாம் கொடுத்த ஓர்
இதயம்
நீ செய்த சேட்டையெல்லாம்
பொறுத்துக்கொண்ட ஓர் இதயம்
இன்றும் துடிக்கிறது..
முதியோர் இல்லத்தில்
என் மகன்
எப்படி இருக்கிறானோ என்று..!

**ரா.செல்வலட்சுமி**
தமிழ்-இளங்கலை இரண்டாமாண்டு

## தோள் கொடுப்பான் தோழன்!

துன்பம் நேர்கையில்
தோள் கொடுப்பது நட்பு..
உறவில்லாதவரும்
உடன்பிறப்பாகுவது நட்பு..
தவறு செய்கையில்
தட்டிக் கேட்பது நட்பு..
மனஸ்தாபம்
ஏற்பட்டாலும் மனம்விட்டுப்
பேசுவதே நட்பு..!

***ச.தமிழ்ச்செல்வி***
தமிழ்-இளங்கலை முதலாண்டு

# உலகப் புத்தக தினம்
## ஏப்ரல்:23

*ஐக்கிய நாடுகள் சபை ஏப்ரல்23 ஆம் தேதியை உலகப் புத்தக தினம் என அறிவித்துள்ளது. மேலும் இந்த நூற்றாண்டின் முதல் ஆண்டாகிய 2001 ஐ உலகப் புத்தக ஆண்டு என அறிவித்தது. இந்திய அரசும் 2001 ஆம் ஆண்டினை உலகப் புத்தக ஆண்டாக அறிவித்து வாசிக்கும் பழக்கம் அதிகரிக்கவும் நூலகப் பயன்,நூலக அறிவு அனைவருக்கும் கிடைத்திடவும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.*

*நமக்குத் தேவையான பலவற்றுள் முக்கியமான ஒன்று புத்தகங்கள். நல்ல நூல்களே உற்ற நண்பர்கள். மற்ற உயிரினங்களின் வாழ்க்கையில் தலைமுறைகள் மாறினாலும் வாழ்க்கை முறைகள் மாறாமல் தொடங்கிய இடத்திலிருந்தே மீண்டும் மீண்டும் தொடங்குகிறது. ஆனால் மனிதனின் வாழ்க்கை மட்டும் தான் ஒரு தலைமுறை விட்ட இடத்திலிருந்து அடுத்த தலைமுறை தொடங்குகிறது. மனிதன் தன்னுடைய வாழ்க்கையை வரலாறாக நூல்களில் பதிவு செய்து செல்வதன் காரணமாகத்தான் இது சாத்தியமாகிறது.*

*வாசிப்பது ஓர் அற்புத அனுபவம். அது புதியதொரு உலகைத் திறந்து காட்டும். பல புதிய அரிய தகவல்களையும் தரும். பல புத்தகங்கள் இந்த உலகையே உலுக்கியுள்ளன. புத்தகங்கள் பல்வேறு உலகங்களை நமக்கு அறிமுகப்படுத்துகின்றன. வாசிப்பு என்பது மனதை ஒருமுகப்படுத்தி, நினைவுத்திறனை அதிகரிக்கிறது. படிப்பவர்களின் கற்பனையையும் அறிவையும் புத்தகம் வளர்க்கிறது.*

*வாசிப்புத்திறன் உயர்வதால் எதிலும் ஆழ்ந்து கவனம் செலுத்துவது இயல்பாகிறது. வாசிக்கக் கிடைக்கும் பரந்துபட்ட அனுபவங்களும் எண்ணங்களும் இதுவரை நாம் அறிந்தவற்றின் எல்லைகளை விரிக்கின்றன. மேலும் சிந்திக்க வைக்கின்றன. புதிய தகவல்களை எளிதில் கிரகிக்க முடிகிறது. சிக்கலான தகவல்களை வகைப்படுத்தி, தேவையானவற்றைத் தேர்ந்தெடுத்துப் பகுத்து வகுத்துப் புரிந்துகொள்ள முடிகிறது. வாசிப்புத் திறன் பிற திறன்களையும் வளர்க்கிறது.*

*தாமே வாசிக்கையில்தான் ஒரு புத்தகத்தின் முழு சக்தியையும் உணர்ந்து கொள்ளமுடியும். நேரில் காணாத காட்சிகளும் முகர்ந்திராத மணங்களும் கேட்டிராத ஒலிகளும் பிடிபடுகின்றன. சந்திக்காத மக்கள் அறிமுகமாகிறார்கள். கற்பனையே செய்திராத அளவிற்கு வாழ்க்கைப்*

*பார்வைகளும் சிந்தனைகளும் பரிச்சயமாகின்றன. ஒரே ஒரு வாழ்க்கை ஒரே ஒரு பார்வை என்றில்லாமல் பல பார்வைகள் கொண்ட பல சாத்தியங்கள் உள்ள பெரிய உலகம் சொந்தமாகின்றது. ஆழ்ந்து வாசிக்கும் அந்த அற்புத கணத்தில் எழுதப்பட்ட பக்கங்களினுள் விரியும் புதிய உலகங்கள் நம்முடன் உறவாடுகின்றன.*

*நவில்தொறும் நூல்நயம் போலும் என்றார் வள்ளுவர். நயமான நூல்கள் தரும் இன்பத்தை ஒரே இடத்தில் அளிப்பது நூல்நிலையமாகும். தேசிய நூலக வார விழா ஆண்டுதோறும் நவம்பர் 14 ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. உலகிலேயே நூலகத்திற்கென ஒருவார காலம் விழா நடத்துவது இந்தியாவில் மட்டும் தான்.*

*படி படி அதுவே*
*வாழ்க்கையின் முதல் படி..!*

***திருமதி ஈ.யுவராணி***
*தமிழ் - உதவிப் பேராசிரியர்*

## பிறப்பு

வெளிவரும் போது
அழுகிறதே..!
தாயின் கருவறைக்குள்
இருப்பதையே விரும்புகிறதோ
குழந்தை..

**நே.மோகனப்பிரியா**
*தமிழ்-இளங்கலை முதலாண்டு*

## தகவல் களஞ்சியம்

### கானகம் அழிந்தால்

*ஒரு வனப்பகுதியில் 40 ஏக்கர் நிலம் அழிகிறது என்றால் ஆயிரத்து ஐந்நூறு வகை பூக்கும் தாவர இனங்களும் 700 மர வகைகளும் 400 பறவை இனங்களும் 150 பூச்சி இனங்களும் 100 வகை ஊர்வனவும் 60 வகை நீர் நில உயிரினங்களும் அழிகின்றன.*

### நெப்போலியனிடம் கம்பராமாயணம்

*நெப்போலியன் ஒரு நூலகம் வைத்திருந்தார். அதில் ஏராளமான நூல்கள் இடம் பெற்றிருந்தன. அந்த நூலகத்தில் இருந்த ஒரேயொரு தமிழ் நூல் கம்பராமாயணம் என்பது குறிப்பிடத்தக்கது.*

**வே.ராகவி**
*தமிழ்-இளங்கலை முதலாண்டு*

### கண்ணால் சாப்பிடும் உயிரினம்

*தேரையும் தவளையும் சாப்பிடுவதற்காக வினோத முறையைக் கையாளுகின்றன. இவையிரண்டும் சாப்பிடுவதற்குக்*

*கண்களையும் பயன்படுத்துகின்றன. உணவை விழுங்குவற்கு நாம் நாக்கை உள் இழுக்கின்றோம். ஆனால் இவ்விரு உயிரினங்களும் கண்களை மூடித் திறப்பதன் மூலம் உணவை உள்ளே தள்ளுகின்றன. இதன் உறுதியான கண் தசைகள் நாக்கில் உள்ள உணவை மேலிருந்து அழுத்தும் போது உணவு உள்ளே செல்கின்றது.*

## பாங்க்

*பண்டைய இத்தாலியில் யூதர்களிடம் பணம் பெற இத்தாலியர்கள் நிறைய பேர் வருவார்கள் அப்போது பயன்படுத்தப்பட்ட பெஞ்சின் பெயர் BANCO. அதுவே பிற்காலத்தில் பாங்க் (BANK) ஆகிவிட்டது.*

## வெற்றியின்வழிகள்

- *தைரியமான எந்த ஒரு காரியத்தையும் தொடங்கும் குணம்*
- *கற்பனைத் திறமையுடன் எதையும் பார்க்கும் குணம்*
- *ஆழ்ந்து சிந்தித்து வேலைகளை ஒழுங்குபடுத்தி அமைக்கும் குணம்*
- *சிந்தனையைச் சிதறவிடாது ஒருமுகப்படுத்திக் கவனமுடன் செயல்படுதல்*
- *நேரத்தையும் பணத்தையும் திட்டமிட்டுச் செலவு செய்வது.*
- *எப்போதும் சுறுசுறுப்புடனும் ஊக்கத்துடனும் இருப்பது*
- *தன்னை அடக்கித் திருத்திக் கொள்ளுதல்*

## மிகச்சிறிய குரங்கு

*உலகில் 250 குரங்கு இனங்கள் இருந்ததாகவும் தற்போது 80 வகை குரங்கு இனங்களே இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. குரங்கு இனங்கள் பிரேசில் நாட்டில் தான் அதிகமாகக் காணப்படுகின்றன.*

*அவற்றில் மிகச்சிறிய குரங்கு இனம் 'பிக்மி மார்மோ செட்' என்பதாகும். இந்த இனக்குரங்குகள் 9.1 செ.மீ உயரமே இருக்கின்றன.*

**உஷா**

*தமிழ்-இளங்கலை முதலாண்டு*

## ஓரெழுத்தொருமொழி

### உயிர் வரிசை

*ஆ – பசு*

*ஈ - ஈ என்னும் பறவை*

*ஊ – உணவு*

ஏ – அம்பு

ஐ – தலைவன்

ஓ – மகிழ்ச்சி

**ம வரிசை**

மா – அழகு

மீ – உயிர்ச்சி

மூ - மூப்பு,மூன்று

மே – அன்பு,மேம்பாடு

மை – அஞ்சனம், எழுது மை

மோ – மோத்தல்

**ந வரிசை**

நா – நாக்கு

நீ – முன்னிலை

நொ – துன்பம்

நே – அன்பு,அருள்

நை - இகழ்ச்சிக் குறிப்பு

நோ – நோய்,துன்பம்

**த வரிசை**

தா – அழிவு,தாண்டுதல்

தீ – நெருப்பு,இனிமை

து – உண்,அசைத்தல்

தூ – தூய்மை,பகை

தே – கடவுள்,அருள்'

தை – ஒரு திங்கள்

**ப வரிசை**

பா – பாட்டு,அழகு

பூ - மலர்,புவி

பே – நுரை,மேகம்

பை – கொள்கலம்,இளமை

போ – போதல்

**க வரிசை**

கா – காத்தல்,சோலை

கூ - நிலம்

கை – கை,ஒழுக்கம்

கோ – மன்னன்,பசு

**வ வரிசை**

வா – வருதல்

வீ – மலர்,விரும்புதல்

வை – வைத்தல்,வைக்கோல்

வௌ – கைப்பற்றுதல்,ஒலிக்குறிப்பு

**ச வரிசை**

சா – சாதல்,சோர்தல்

சீ - இகழ்ச்சிக் குறிப்பு,இலக்குமி

சே – காளைமாடு,சிவப்பு

சோ – மதில்,நகர்

**ய வரிசை**

யா – யாவை,ஒரு வகைமரம்

**க.ரம்யா**

***தமிழ்-இளங்கலை இரண்டாமாண்டு***

## இ-மெயிலைக் கண்டுபிடித்த தமிழர்

இன்றைக்கு உலகின் ஒரு முனையிலிருந்து மறு முனைக்கு ஒரு செய்தியையோ ஒலி மற்றும் ஒளிப்படத்தையோ புகைப் படத்தையோ உடனே அனுப்பி மறு

நிமிடத்தில் கிடைக்கச் செய்யும் வசதியுடையது இ-மெயில். மின்சாரம் இல்லாத மனிதனின் வாழ்க்கையை எப்படிக் கற்பனை செய்ய முடியாதோ அதே போல இ-மெயில் இல்லாத மனித வாழ்க்கையை நினைத்துப் பார்க்க முடியாது.

முக்கியத்துவம் வாய்ந்த இந்த இ-மெயிலைக் கண்டுபிடித்தவர் ஓர் அமெரிக்கரோ,ஐரோப்பியரோ அல்ல. 14 வயதடைந்த சிவா அய்யாதுரை எனும் வெளிநாட்டுவாழ் தமிழர். இவருக்கு இப்போது வயது 48. அமெரிக்காவின் நியுஜெர்ஸி மாகாணத்தில் வசித்து வருகின்றார்.

இவர் ஊர் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பரமன் குறிச்சி ஆகும். இவரது தாத்தா ஒரு சிவில் இன்ஜினியர். இவரது தாயார் அந்தக் காலத்திலேயே எம்.எஸ்ஸி பட்டத்தில் தங்கம் வென்றவர். பெற்றோர் 1970 இல் அமெரிக்காவில் குடியேறினர்.

சிறுவயதில் இருந்து படிப்பிலும் விளையாட்டிலும் ஆர்வம் காட்டிய இவர் பள்ளிப் பருவத்தின் கோடை விடுமுறையில் FORTRAN, COBOL, PL/1,SNOBOL,BASIC ஆகிய ஐந்து வித்தியாசமான கம்ப்யூட்டர் மொழிகளைக் கற்றவர். கம்ப்யூட்டர் புரோகிராம் என்றால் என்ன என்று யாருக்கும் தெரியாத காலத்தில் தான் இந்தக் கம்ப்யூட்டர் மொழிகளைக் கற்றுக்கொண்டார்.

1978 இல் நியுஜெர்ஸி மாகாணத்தில் நெவார்க்கில் உள்ள யுனிவர்சிட்டி ஆ.்.ப் மெடிசின் அண்ட் டென்ஸ்டரி கம்ப்யூட்டர் பணிக்குச் சென்று அங்கு கம்ப்யூட்டர் மென்பொருள் ஒன்றை இவர் வடிவமைத்தார். பரபரப்பான அந்த அலுவலகத்தில் எல்லா தகவல் பரிமாற்றங்களும் காகிதத்தில் எழுதப்பட்டு வந்தன. இது அதிக நேரம் மனித உழைப்பை எடுத்துக்கொண்டதைத் தவிர்க்க விரும்பினார். கம்பெனி மேலாளர் இந்தத் தகவல் தொடர்புப் பணியைக் கம்ப்யூட்டர் மயமாக்க முடியுமா என்று சிவாஅண்ணா துரையிடம் கேட்க இச்சவாலை ஏற்றுப் பல நாட்கள் உறக்கமில்லாமல் மிகக் கடுமையாக உழைத்துத் தகவல் தொடர்புக்கான கம்ப்யூட்டர் புரோகிராம் ஒன்றினை உருவாக்கினார். அதன் இடுகுறி ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட வரிகளை உடையதாக இருந்தது. இதைத்தான் **இ-மெயில்** என்றழைத்தார். இது டெக்ஸ்ட் மெசேஜ் அல்ல. ஒரு சிஸ்டம் என்றார். இ-மெயிலில் உள்ள

*inbox,outbox,From,To,Subject,cc,Bcc, Body,Forward,Reply எல்லாம் இவர் கண்டுபிடித்தவைகளே. 30.08.1982 ஆம் ஆண்டு இ-மெயில் கண்டுபிடிப்புக்கான காப்புரிமையையும் பெற்றார்.*

***லோ.சென்னியப்பன்***

தமிழ்-இளங்கலை முதலாண்டு

## ஆரோக்கியம் - தூக்கம்

*நம் உடலில் மெலட்டோனின் என்கிற ஹார்மோன் சுரக்கிறது. இது அதிகமாக சுரக்கும் போது தூக்கம் வருகிறது. குறைவாக சுரக்கும் போது தூக்கம் வருவதில்லை. நம்மைச் சுற்றி அதிகமான வெளிச்சம் இருக்கும் போது குறைவான ஹார்மோனும் குறைவான வெளிச்சம் இருக்கும் போது அதிகமான ஹார்மோனும் சுரக்கிறது. ஆழ்ந்த தூக்கத்தைப் பெற நடைமுறை வாழ்வில் சிற்சில திருத்தங்களை மேற்கொண்டால் போதும் ஆழ்ந்த தூக்கம் நமக்குக் கிடைக்கும்*

*காபி, தேனீர், சாக்லெட், குளிர்பானங்கள் போன்றவற்றைச் சுத்தமாகத் தவிர்த்து விடுவது நல்லது. ஏனெனில் இவற்றிலுள்ள வேதிப்பொருட்கள் மெல்டோனின் என்ற ஹார்மோனைக் கட்டுப்படுத்துகிறது. இரவு 8.00 மணிக்கு மேல் கம்ப்யூட்டரின் முன் அமர்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். குறிப்பிட்ட சமயத்தில் கம்ப்யூட்டர் முன்பிருந்து எழுந்தால்தான் இரவு ஆழ்ந்து தூங்க முடியும்.*

*இரவு தூங்குவற்கு தூக்க மாத்திரை பயன்படுத்துவதை முழுவதுமாகத் தவிர்ப்பது நல்லது. தூங்கும் முன் உங்கள் அலைபேசியை அணைத்துவிடுவது மிக நல்லது.*

*உறங்குவதற்கு இரண்டு மணி நேரம் முன் இரவு உணவை முடிப்பது நல்லது. இரவில் அரைவயிற்றுடன் உறங்குவதே உத்தமம்.*

*உடற்பயிற்சி,நடைப்பயிற்சி செய்வது நம் ஆரோக்கியத்திற்கு நல்லதுதான் ஆனால் அவற்றை உறங்குவதற்கு 4.00 மணி நேரம் முன்பே முடித்துக் கொள்ள வேண்டும்..*

***ம.கோவர்த்தினி***

*வேதியியல்-இளங்கலை இரண்டாமாண்டு*

## தொலைபேசியை எடுத்தவுடன் ஏன் ஹலோ என்று சொல்கிறோம்..?

*தொலைபேசியில் முதன் முதலில் கூறப்பட்ட வார்த்தை அஹோய்(ahoy) என்பதாகும். கடலோர மாநிலமான*

கனெக்டிக்கட்டில்தான் முதலில் ஒழுங்குபடுத்தப்பட்ட தொலைபேசி முறை அமலுக்கு வந்தது. கடல் மைல் தொடர்பான இந்த வாழ்த்துச் சொல் அஹோய் என்பதுதான் முதலில் பயன்படுத்தப்பட்டது. இதற்குப் பதில் வாழ்த்துக் கூறிய அலெக்ஸாண்டர் கிரகாம்பெல் கேலிக் வழக்கப்படி ஹாய் என்றார். தாமஸ் ஆல்வா எடிசன் அவரை வாழ்த்தும் போது வியப்புக் கலந்த தொனியில் ஹலோ என்றார். இது இடைக்காலத்தில் வழக்கில் இருந்த சொல். அந்த ஹலோதான் இன்றுவரை தொடர்ந்து வருகிறது.

**த.மேனகா**

தமிழ் - இளங்கலை முதலாமாண்டு

## பன்னிரண்டு

ஒரு மகாமகம் என்பது 12 ஆண்டுகள்
ஓர் ஆண்டுக்கு 12 மாதங்கள்
ஒரு டஜனுக்கு 12 உருப்படிகள்
ஓர் அடிக்கு 12 அங்குலங்கள்
ஒரு கலம் என்பது 12 மரக்கால் அளவு
தமிழில் உயிர் எழுத்துகள் 12
தமிழில் தொகுக்கப்பெற்ற சைவத் திருமுறைகள் 12
குறிஞ்சிப் பூ 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும்
ஏசுநாதரின் சீடர்கள் 12
இந்தியா சுதந்திரம் பெற்ற நேரம் நள்ளிரவு 12 மணி
ஆழ்வார்களின் எண்ணிக்கை 12
இறுதி அடியோடு சேர்த்து இத்தகவலும் 12.

**இ.மதுபாலா**

தமிழ்-இளங்கலை இரண்டாமாண்டு

## நம்பவே முடியல..!

- மனிதனின் மூலாதாரமே மூளைதான். ஆனால் மனித உடலின் அச்சாணியாக இருக்கும் மூளையே தன் வளர்ச்சிக்குஇன்னொன்றைச் சார்ந்திருக்கிறது என்றால் நம்புவீர்களா?

  ***அதுதான் போலிக் அமிலம் எனப்படும் விட்டமின் B9***

- சில தாவரங்கள் கூட அசைவ உணவு விரும்பிகளாக உள்ளன என்றால் நம்பமுடிகிறதா?

  ஆம் காளான்களில் பூஞ்சான் வகைக் காளான்கள் தன் உடலில் வளையம் போன்றதூண்டில் மூலம்நாடாப் புழுக்களையும் கொக்கிப் புழுக்களையும் உண்ணுகின்றன.இக்காளான் கள் கடலுக்கு அடியில் வாழ்கின்றன.

● அளவுக்கு அதிகமாகச் சிரிப்பவர்களே!

நீங்கள் விழுந்து விழுந்து சிரிக்கும் போது சுருக்கென நெஞ்சில் வலி வந்து நீங்குவதும் கண்ணில் நீர் வருவதும் இதயம் பாதிக்கப்படுவதன் அறிகுறியே..

எனவே ஓவரா சிரிக்காதிங்க..!

● நமது உடலில் செல் பிரிவின் மூலமாகவே நாம் வளர்ந்து வருகிறோம். ஆனால் செல் பிரிவே நடைபெறாத ஒரே மண்டல அமைப்பு தெரியுமா?

அதுதான் நரம்பு செல் மண்டலம்

● சுருக்கம் முகத்தில் இருந்தால் அதைப் போக்குகிறதாம் தலையணை. எப்படி?

இந்தப் புதிய தலையணைக்குள் தாமிரமும் ஆக்சிஜனும் சேர்ந்த காப்பர் ஆக்ஸைடு என்ற வாயுக்கலவை அடைக்கப் பட்டிருக்கும். இதைத் தலைக்கு வைத்துத் தூங்கும் போது, சருமத் துவாரங்கள் வழியாக வெளியேறும் வியர்வையுடன், இந்த வாயுக்கலவை வினைபுரிந்து முகத்தில் உள்ள சுருக்கத்தை நீக்குகிறதாம். இந்தத் தலையணையை இங்கிலாந்து விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர்.

**ச.நித்யகௌசல்யா**

உயிர் வேதியியல்

இளங்கலை மூன்றாமாண்டு

## அன்னை தெரசா பெற்ற விருதுகள்

1)மகசேசேவிருது(பிலிப்பைன்ஸ்) – 1962

2)உலக அமைதி விருது(போப் பரிசு) – 1979

3)குட் சமாரிட்டன்(அமெரிக்கா) – 1971

4)டெம்பிள்டன்(லண்டன்) – 1972

5)பால்சன் விருது – 1972

6)சத்பாவனா விருது – 1993

7)நோபல் பரிசு – 1979

8)நேரு விருது – 1972

9)பத்மஸ்ரீ விருது – 1962

**ம.வசந்த குமார்**

தமிழ்-இளங்கலை முதலாண்டு

## கல்லூரி நாட்கள்

கல்லூரிக் காலங்கள்
கற்றுத் தந்த பாடங்களும்
பெற்றுத் தந்த இன்பங்களும்
மிகையாகி நிற்கிறது நினைவில்.

*ஒவ்வொரு நாட்களும்*
*ஏதேனும் ஒரு வகையில்*
*அர்த்தம் அடைந்தே நிறைவுற்றது..*
*பெரும்பான்மை நாட்களை*
*நட்பென்ற உணர்வே*
*தன்னுள் நிறைத்துக்கொண்டது..*
*மெல்லியதாய் அரும்பிய நேசம்*
*புன்னகைப் பூக்களை*
*பகிர்ந்து மனம் வீசி*
*மனதிற்குள்ளேயே தேக்கம் கொண்டது..*
*புத்தகப் பாடங்களை விட*
*வாழ்க்கைப் பாடங்களைத் தான்*
*அதிகம் கற்பித்துக் கொடுத்தன*
*எம் கல்லூரிக் காலங்கள்...*

***மா.யோகப்பிரியா***
*வணிகவியல்-இளங்கலை இரண்டாமாண்டு*

## அடடே..!

*அடடே..*
*பயணிகள் இல்லாத*
*ஒரு அழகு விமானம்*
*வண்ணத்துப் பூச்சி*

***வி.பிரியதர்ஷினி***
*வணிகவியல்-இளங்கலை இரண்டாமாண்டு*

## புறப்படு...!

*கண்ணிருந்தும் குருடராய்*
*வாயிருந்தும் ஊமையாய்*
*காதிருந்தும் செவிடராய்*
*கை காலிருந்தும் ஊனமாய்*
*திறனிருந்தும் சோம்பேறியாய்*
*அறிவிருந்தும் மூடராய்*
*தேவையிருந்தும் உழைக்காமல்*
*வீணாய் பொழுது போக்கும்*
*இளைஞனே..!*
*புறப்படு வேலைக்கு*
*பரமனும் பிரம்படி பட்டுத்தான்*
*பிட்டுக்கு மண் சுமந்தான்*
*பாரதத்தை முன்னேறச் செய்ய*
*கடன் தொல்லையைக் கலைத்திட*
*புறப்படு புதியதோர்*
*பாரதம் அமைக்க..*

***ஆ.கிருஷ்ணகுமாரி***
*தமிழ்-இளங்கலை இரண்டாமாண்டு*

## உறைக்கட்டும்..!

*கடைசி மரமும் வெட்டுண்டு*
*கடைசி நதியும் விஷமேறி*
*கடைசி மீனும் பிடிபட*
*அப்பொழுது தான் உறைக்கும்*
*மனிதனுக்கு*
*பணத்தைச் சாப்பிட*
*முடியாது என்று...*

***இ.ரஞ்சித் குமார்***
*வணிகவியல்-இளங்கலை இரண்டாமாண்டு*

## வலி...!

*உளியின் வலி பொறுத்தால் தான்*
*கல் கூட சிற்பமாகும்..*
*வலியே வாழ்க்கையாகும் பொழுது*
*எல்லாமே சொர்க்கம்தான்..*
*உளியின் வலியை*

பொறுக்கவில்லையென்றால்

கல் சிதைந்துவிடும்..

வாழ்க்கையும் அப்படித்தான்...

**க.கவின்குமார்**

தமிழ்-இளங்கலை இரண்டாண்டு

## டுவிட்களம்

**twitter.com/ பிரதானமந்திரி லூக்கா:**

அது வரைக்கும்
pulsar, splendor, scooty னு
சொன்னவன் கார் வாங்கினப்பறம் 'டு வீலர்' னு சொல்லுவான் பாருங்க, அங்க தான் பணக்காரத்தனம் ஆரம்பிக்குது.

**twitter.com/ சிக்ஸ்பேக் சிங்கம் :**

ஒவ்வொரு தோல்வியும் ஓர் அனுபவம்!!

ஒவ்வொரு இழப்பும் ஒரு லாபம்!!

ஒவ்வொரு ஏமாற்றமும் ஓர் எச்சரிக்கை!

**twitter.com/ ஜூனியர் ஓல்ட்மாங்க்:**

பொழப்புக்குப் போன ஊர்லயே தங்கிட்டாலும் செத்ததும் ஊருக்கு கொண்டு போணும்னு தோணுதுல்ல அதான்யா கிராமம்.

**twitter.com/ நாட்டுப்புறத்தான்:** சில நாட்களுக்கு மனசாட்சியை அடமானம் வைக்க வேண்டி உள்ளது. அதிலொன்றும் பிரச்சினையில்லை. என் கவலையெல்லாம் மீட்க முடியாமலேயே போய்விடுமோ என்றுதான்!

**twitter.com/ராஸ்கோலு :**

இச்சமுதாயத்தில் தற்கொலை செய்து கொள்ள பல காரணங்கள் இருக்குது. வாழத்தான் ஒரு காரணமும் இல்லை.

**twitter.com/ பித்தன்:**

அநியாயங்களைக் கண்டும் காணாமல் மெல்ல நகருங்கள் இல்லையெனில் உங்களைக் கண்ணில் காணாதவாறு வேகமாகச் செய்து விடுவார்கள்.!

**twitter.com/ மிருதுளா:**

சந்தேகங்கள் தந்த சுவாரஸ்யத்தைப் பெரும்பாலும் விளக்கங்கள் தந்துவிடுவதில்லை.

**twitter.com/ குசும்பன் :**

அப்பா எனக்குப் பீப்பி வாங்கி தாங்க.. வேணாம் நீ எல்லாரையும் டிஸ்டர்ப் பண்ணுவ. இல்லப்பா நான் எல்லோரும் தூங்குனதுக்கு அப்புறம் ஊதுறேன்..

**twitter.com/ டுவிட்டர் பவன்:**

சோகத்துல பெரிய சோகம் ரயில்ல டாய்லட்டுக்குப் பக்கத்துல பெர்த் சீட் கிடைப்பதுதான்... நைட்டு கண்ண மூடுவனா இல்ல மூக்க மூடுவனா...?

***twitter.com/ சிட்டு:*** *தங்கத்தையும் சாக்லேட்டையும் நீட்டும் போது சாக்லேட் எடுக்கும் குழந்தையிடம் தோற்றுப் போகிறோம் நாம் அனைவரும்...*

***twitter.com/ ஸ்ரீ:*** *குழந்தைகள் கையில் வீடியோ கேம்ஸ். நம் சௌகரியத்துக்காகப் பழக்கப்படுத்தி விட்டுப் பழி மட்டும் பிள்ளைகளின் மீது...*

***twitter.com/ சிட்டு:***

*இளம் விதவைகளின் பொட்டைத்தான் அழிக்க முடியும்.. ஆசைகளை அல்ல...*

***twitter.com/ சப்பாணி:*** *குழந்தைகளை அதிகம் ஏமாற்றும் வாசகம் 'அப்பறம் வாங்கித் தர்றேன்'...*

## நட்சத்திரங்களுக்கும் நிறமுண்டு

*நட்சத்திரங்களுக்கும் நிறமுண்டு என்பது உங்களுக்குத் தெரியுமா? எல்லா நட்சத்திரங்களுக்கும் நிறம் உண்டு. அந்தந்த நட்சத்திரத்தின் மேல் பரப்பில் காணப்படும் வெப்பத்தைப் பொறுத்து நிறங்கள் மாறுபடுகின்றன. சில நட்சத்திரங்கள் குளிர்ச்சியாக இருக்கும் அவற்றின் புறவெப்பம் மூவாயிரம் டிகிரி செல்சியஸாக இருக்கும். அந்த வெப்பநிலை கொண்ட நட்சத்திரங்களின் புறவெப்பம் பத்தாயிரம் டிகிரிக்கு மேலும் காணப்படும். அதுபோன்று வெப்பமுள்ள நட்சத்திரங்கள் நீல நிறத்தில் ஒளிரும். நாம் அன்றாடம் பார்க்கும் சூரியனும் ஒரு நட்சத்திரமே. இதன் புறவெப்பம் ஐயாயிரம் டிகிரி செல்சியஸ் ஆகும். சூரியனின் நிறம் மஞ்சள் கலந்த வெள்ளை ஆகும். நட்சத்திரங்களின் நிறங்களை வெறும் கண்ணால் பார்க்க முடியாது. சக்தி வாய்ந்த தொலைநோக்கியால் மட்டுமே பார்க்க முடியும்.*

***சு.சுரேகா***

*தமிழ்-இளங்கலை முதலாண்டு*

## அன்பு

*உண்மையான*
*அன்புக்கு மட்டுமே*
*உனது*
*கண்ணீர் துளிகள் தெரியும்*
*நீ மழையில்*
*நனைந்து கொண்டே*
*அழுதாலும்..*
*அன்பெனப்படுவது*
*பெற்றுக்கொள்வதல்ல*
*பரிமாறப்படுவது...*

***பி.மேகலா***

*தமிழ்-இளங்கலை முதலாண்டு*

## நட்பு

*தினம் திட்டும்*
*அப்பாவின் வார்த்தைகளை விட*
*திட்டாமல் நகரும்*
*நண்பனின் வார்த்தை கொடியது..*

***ச.தமிழ்ச் செல்வி***
*தமிழ்-இளங்கலை முதலாண்டு*

## நீதிமன்றம்

எல்லா குற்றங்களையும்
மன்னிக்கும் ஒரே நீதிமன்றம்
அம்மாவின் இதயம்..!

**இரா.சௌமியா**
*வணிகவியல்-இளங்கலை இரண்டாமாண்டு*

## தாய்மையின் வலி.!

தாய்மையின் வலி
என்னவென்று எனக்குத் தெரியும்
அதனால் தான்
அவளோடு சேர்ந்து
நானும் அழுதேன்
அன்று நான் பிறந்த பொழுது..

**கோ.கலையரசி**
*தமிழ்-இளங்கலை முதலாண்டு*

## நோபல் பரிசு பெற்ற பெண்மணிகள்

*உலகளவில் பெரிதும் மதிக்கப்படுகின்ற நோபல் பரிசு, ஆல்பிரட் நோபல் என்பவரால் 1895இல் தொடங்கப்பட்டது. 1901 ஆம் ஆண்டு தொடங்கி இதுவரை சுமார் 800 நோபல் பரிசுகள் வழங்கப்பெற்றுள்ளன. 36 பெண்கள் இப்பரிசினை பெற்றுள்ளனர். இந்த ஆண்டும் பெண்கள் சிலர் இப்பரிசினைப் பெற்றுள்ளனர்.*

*உடல் செல்களில் உள்ள குரோமோசோம் குறித்த ஆய்வுகள் ஏராளமாக நடைபெறுகின்றன. இந்த குரோமோசோமின் இறுதியில் உள்ள பகுதியின் பெயர் டெலோமியா ஆகும். இதுதான் குரோமோசோம்களைக் கட்டுப்படுத்துகிறது என்பதே தற்போது நோபல் பரிசு பெற்றுள்ள கண்டுபிடிப்பாகும்.*

*மனித குலத்தின் நல்வாழ்விற்கு நன்மை பயக்கும் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு அதற்கான நோபல் பரிசினைப் பெற்றுள்ள மூவர் 1) எலிசபெத் பிளாக்பர்ன் 2)காரல் கிரைடர் 3)ஜேக் ஸாஸ்டெக் ஆகியோர் இவர்களின் முதல் இருவர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.*

*ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த எலிசபெத் பிளாக்பெர்ன் அமெரிக்க குடியுரிமை பெற்றவர் சான்பிரான்சிஸ்கோவில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகிறார். நோபல் பரிசு பெற்ற முதல் ஆஸ்திரேலிய*

பெண்மணி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருடன் இணைந்து நோபல் பரிசு பெற்ற மற்றொரு பெண்மணி ஜான் ஹாப்கின் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த காரல் கிரைடர். 48 வயது ஆகும் இவர் நீண்ட வருடங்களாக எலிசபெத் பிளாக்பெர்டனுடன் இந்த ஆராய்ச்சியில் முக்கிய பங்களிப்பு செய்திருக்கிறார். கலிபோர்னியாவின் சாண்டியேகோவில் பிறந்த காரல் கிரைபர் 1987 இல் மூலக்கூற்று உயிரியலில் பெர்க்லி, கலிபோர்னியா பல்கலைக்கழத்தில் எலிசபெத் பிளாக்பெர்னின் வழிகாட்டுதலின் கீழ் முனைவர் பட்டம் பெற்றவர்.

நோபல் பரிசு பெற்றுள்ள மற்றொரு பெண்மணி இஸ்ரேலைச் சேர்ந்த அடயோனத் ஆவார். ரைபோசோம் எனப்படும் செல்களுக்குள் புரதங்கள் உற்பத்தியாவது தொடர்பான ஆய்வுக்காக இவருக்கும் தாமஸ் ஸ்டெட்ஸ் மற்றும் இந்தியாவைச் சார்ந்த வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன் ஆகியோருக்கும் 2009 ஆம் ஆண்டு வேதியியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை நோபல் பரிசு பெற்றிருக்கும் ஒன்பது இசுரேலியர்களுக்கும் இவரே முதல் பெண்மணி என்பதும் இதற்கு முந்தைய 45 ஆண்டுகளில் வேதியியலில் நோபல் பரிசு பெற்ற முதல் பெண்மணி என்பதும் குறிப்பிடத்தக்கது.

### அமைதிக்கான நோபல் பரிசுபெற்ற பெண்மணிகள்

வரலாற்றில் முதல் முறையாக மூன்று பெண்கள் அமைதிக்கான நோபல் பரிசு பெறுவது இதுதான் முதல் முறை (2011). திருமதி.தவாக்குல் கார்மன், திருமதி.எலன் ஜான்சன் சர்லீப், திருமதி. லேமெக் கோவீ.

### திருமதி தவாக்குல் கார்மன்

மூன்று குழந்தைகளுக்குத் தாயான இவர் ஏமன் நாட்டில் செயல்படும் மனித உரிமைகள் அமைப்பின் தலைவராக உள்ளார். பத்திரிக்கையாளரான இவர் ஏமனின் முன்னாள் அதிபர் எலி அப்துல்லா சலேவுக்கு எதிராகப் போராட்டம் நடத்தியதில் குறிப்பிடத்தக்கவர். மக்களை ஒன்று திரட்டி அமைதியான வழியில் போராட்டம் நடத்திக் கடந்த ஆண்டு சனவரியில் அப்துல்லா பதவி விலக முக்கியக் காரணமாக விளங்கினார்.

### திருமதி எலன் ஜான்சன் சர்லீப்

நோபல் பரிசு பெறும் பெண்களில் ஒருவரான இவர் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் பொருளாதாரம் பயின்றவர். 2005 ஆம் ஆண்டு ஆப்பிரிக்காவில் ஜனநாயக முறையில் லைபீரியாவின்

அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் என்ற சிறப்பைப் பெற்றவர். அதிபராகப் பதவி வகிக்கும் போது பல சீர்திருத்தங்களில் ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து லைபீரியாவில் அமைதி நடவடிக்கைகளை மேற்கொண்டார்

**திருமதி லேமெக் கோவி**

கடந்த 2003 ஆம் ஆண்டு வரையில் லைபீரியா உள்நாட்டுப் போரால் பெரிதும் பாதிக்கப்பட்டது. கடந்த 14 ஆண்டுகளாக நடைபெற்ற உள்நாட்டுப் போரில் 250 இலட்சம் பேர் இறந்துள்ளனர். இதில் கோவியின் சேவை மிக முக்கியமானதாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

**த.மேனகா**

தமிழ் - இளங்கலை முதலாமாண்டு

## முதல் விமானப் பணிப்பெண்

1930 ஆம் ஆண்டு உலகின் முதல் விமானப் பணிப்பெண்ணாக ஹெலின் சர்ச் என்பவர் தனது 25 ஆவது வயதில் பணியேற்றார்

**த.சம்பூர்ணம்**

வணிகவியல்-இளங்கலை இரண்டாமாண்டு

## இந்திய ரயில்வே மண்டலங்கள்

1)வடகிழக்கு ரயில்வே
2)வடகிழக்கு எல்லை ரயில்வே
3)கிழக்கு ரயில்வே
4)தென்கிழக்கு ரயில்வே
5)தென் மத்திய ரயில்வே
6)தென்னக ரயில்வே
7)மத்திய ரயில்வே
8)மேற்கு ரயில்வே
9)தென்மேற்கு ரயில்வே
10)வடமேற்கு ரயில்வே
11)மேற்கு மத்திய ரயில்வே
12)வட மத்திய ரயில்வே
13)தென்கிழக்குமத்திய ரயில்வே
14)கிழக்குக் கடற்கரை ரயில்வே
15)கிழக்கு மத்திய ரயில்வே
16)கொல்கத்தா மெட்ரோ ரயில்வே

**பி.வளர்மதி**

தமிழ்-இளங்கலை முதலாண்டு

## நட்பு..

நான் இறந்துவிட்டால்
சீக்கிரமாக என்னை
எறித்துவிடுங்கள்
நண்பன் பிரிவு
தாங்கமாட்டான்..

**ஜீவானந்தம்**

தமிழ்-இளங்கலை முதலாண்டு

## பாண்டிய நாட்டில் பிற நாட்டவர் ஆட்சி

*களப்பிரர் ஆட்சி, சோழராட்சி, முகமதியர் ஆட்சி, ராயர்களின் ஆட்சி, விஜய நகர ஆட்சி எனும் ஆட்சிகள் பாண்டிய நாட்டில் ஒரு காலத்தில் வேரூன்றி இருந்தன. ஆகியவற்றை ஒரு கழுகுப் பார்வையாக இக்கட்டுரை வழி அறிந்து கொள்ளலாம்.*

***களப்பிரர் ஆட்சி***

*களப்பிரருக்குக் கீழடங்கிய பாண்டியர் (அடர் பச்சை நிறம்) இராசராட்டிரப் பாண்டியர் (நீலம்) - கி.பி.436 - 463*

*வட நாட்டில் பல்லவர்களால் அடித்து விரட்டப்பட்ட களப்பிரர் கி.பி.(300-600). கன்னட நாடு வழியாகக் கொங்கு நாட்டிலும் சேர,சோழ பாண்டிய நாட்டிலும் புகுந்து பாண்டியர்களை அடக்கி ஆண்டனர். களப்பிரர்களைத் தொடர்ந்து வந்த பல்லவர் ஆட்சிக் காலமான கி.பி.350-550 வரையிலும் பாண்டியப் பேரரசு பெரும் வீழ்ச்சியில் இருந்ததாகக் கருதப் படுகிறது. ஆனாலும் கடுங்கோன் ஆட்சியில் பாண்டியர் ஆட்சி எழுச்சிப் பெற்றது. பல்லவர்களின் வீரியமான தாக்கமும் களப்பிரர்களை வீழ்த்தியது. இதன் பின்னர் இடைக்காலப் பாண்டிய அரசு எழுச்சிப் பெற்றது.*

***சோழராட்சி***

*பாண்டிய நாட்டின் பெரும் பகுதிகள் கி.பி.1020 முதல் கி.பி.1070 வரை* ***வைரசோ*** *மன்னர்களின் ஆட்சியில் இருந்தது. இராசராசன் மகனான இராசேந்திர சோழனின் மூன்று மகன்களான சுந்தரசோழ பாண்டியன்,விக்கிரம சோழ பாண்டியன், பராக்கிரம பாண்டியன் மூவரும் சோழ பாண்டியர் எனப் பட்டம் பெற்றுப் பாண்டிய நாட்டை ஆட்சி செய்த சோழ மன்னர்களாவர். பாண்டிய நாட்டிற்கு இராசராச மண்டலம் எனப் பெயரிட்டுத் தங்கள் ஆட்சிக்கு முரண்பட்ட பாண்டியர்களைத் திறை செலுத்துமாறு கடுமையாக உத்தரவு பிறப்பித்தனர்.*

***முகமதியர் ஆட்சி***

*கில்ஜி பேரரசின் மன்னன் மாலிக்காபூரிடம் பாண்டிய மன்னனான சுந்தர பாண்டியன் தன் தம்பியான இரண்டாம் வீர பாண்டியனை வெல்ல உதவியினை நாடினான். இரண்டாம் வீர பாண்டியனை வெற்றி கொண்ட மாலிக்காபூர் சுந்தரபாண்டியனை அடிமைப்படுத்தினான். சயாவுடீன் பார்னி, அமீர்குசுரு, வாசப் போன்றவர்களின் கூற்றுப்படி மாலிக்காபூர் பாண்டிய நாட்டில் அமைந்திருந்த கோயில்களை இடித்து அங்கிருந்த பொன், பொருள்களைக் கொள்ளையிட்டுச் சிற்பங்கள் பலவற்றையும் சிதைப்பற்குக் காரணமானான்.*

மேலும் கொள்ளையிட்ட பொருள்களை டில்லிக்குக் கொண்டு சென்றான். சுந்தரபாண்டியன் இரண்டாம் வீரபாண்டியன் ஆகியோரிடமிருந்து மாலிக்காபூர் 612 யானைகள்,20000 குதிரைகள், 96000 மணங்கு பொன்,முத்து போன்ற அணிகலன்கள் அடங்கிய பெட்டிகளை எடுத்துச் சென்றான் எனப் பார்னி என்பவன் குறித்துள்ளான். அவன் வழி வந்தவர்கள் நாயக்கர்களால் தோற்கடிக்கப் பட்டார்கள்.

1330 ஆம் ஆண்டளவில் பாண்டிய நாட்டில் முகமதியர் ஆட்சி நுழைந்தது. டில்லி துக்ளக்கின் அதிகாரியாகத் திகழ்ந்த ஜலாலுதின் அசன்சா மதுரையினைக் கைப்பற்றி ஆட்சி செய்தான். இவனது ஆட்சிக்குப் பின்னர் அலாவுதின் உடான்றி, குட்புதின், நசிருதின், அடில்ஷா, ப.்.ருதின் முபாரக்ஷா, சிக்கந்தர்ஷா ஆகியோர்களின் ஆட்சி மதுரையில் இருந்தது. தம் பெயர்களினால் நாணயங்கள் வெளியிட்டனர். இவர்களைப் பற்றிய தகவல்கள் புதுக்கோட்டையில் உள்ள இரு கல்வெட்டில் குறிப்பிடப்பெற்றுள்ளது. இபின்படூடா என்பவரின் குறிப்பின்படி இம்மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் உள்நாட்டுக் குழப்பங்கள், கலகங்கள் ஏற்பட்டன. கோயில் வழிபாடானது விழா இன்றிச் சீரழிந்தது. பாண்டிய நாட்டு மக்கள் துன்புற்றனர்.

### முகமதியர் ஆட்சியின் கீழிருந்த பாண்டிய மன்னர்கள்

- மாறவர்மன்குலசேகரபாண்டியன் - கி.பி. 1314-1346
- சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் -கி.பி. 1315-1347
- மாறவர்மன் வீரபாண்டியன் - கி.பி.1334-1380
- மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் - கி.பி.1335-1352

### ராயர்களின் ஆட்சி

பாண்டியர் தமது நாட்டினை ஆட்சி செய்த காலத்தில் வாணாதிராயர்கள் பலர் இருந்தனர். புதுக்கோட்டை கோனாடு இருந்த பொழுது பிள்ளை குலசேகர வாணாதிராயன் ஒருவன் பாண்டிய நாட்டில் ஆட்சி செய்து வந்தான். இராமநாதபுரத்தில் கேரள சிங்க வளநாடு இருந்தது. அங்கு வாணாதிராயன் என்பவன் ஆட்சி செய்தான். ஸ்ரீவில்லிபுத்தூரில் 1453 ஆம் ஆண்டளவில் வரையப்பட்ட கல்வெட்டில் மகாபலி வாணாதிரையர் சீர்மையான மதரை மண்டலம் என உள்ளது. மதுராபுரி நாயகன், பாண்டிய குலாந்தகன்

எனவும் குறிப்பிடப் பெற்றுள்ளது. கி.பி.1483 ஆம் ஆண்டளவில் வரையப்பட்ட கல்வெட்டொன்றின்படி மாவலிவாணாதிராயர் பாண்டியருக்குத் திறை செலுத்தினர் எனக் குறிப்பிடப்பெற்றுள்ளது. புதுக்கோட்டை குடுமியான் மலைக் கல்வெட்டில் பாண்டியர் ராயரிடம் தோற்றமை பற்றிக் குறிப்பிடப்பெற்றுள்ளது.

**விஜய நகரப் பேரரசு**

கி.பி. 1310 முதல் 1748 ஆம் ஆண்டு வரை தமிழகத்தினை விஜயநகரப் பேரரசு ஆண்டது. நாயக்க மன்னர்கள் அரசியல் அதிகாரிகளாக ஆட்சி புரிந்துள்ளனர். இவர்கள் ஆட்சிக் காலங்களில் தமிழகத்தில் கோயில்கள் மண்டபங்கள், சிற்பக்கூடங்கள், உலகப் புகழ் பெற்ற சிற்பங்கள் முதலானவை சிறப்பம்சமாக விளங்கின. சேர, சோழ, பாண்டிய பேரரசுகள் விஜயநகரப் பேரரசு காலத்தில் வீழ்ச்சியுற்றன.

**வே.தீபிகா**

முதலாமாண்டு தமிழ் இலக்கியம்

## புன்னகை...!

புயலுக்குப்பின்
தூறல்போடும் வானத்தைப் போல
என்னை நனைத்துச் செல்லும்
கோபங்களின் முடிவில்
எட்டிப்பார்க்கிறது
உன் மெல்லிய புன்னகை..!

**நே.மோகனப்பிரியா**

தமிழ்-இளங்கலை முதலாண்டு

## இந்தியாவில் வங்கிகளின் வளர்ச்சி

இந்தியாவில் வங்கித் தொழிலானது 18ஆம் நூற்றாண்டு முதல் வளர்ச்சியுற ஆரம்பித்தது. பேங்க் ஆ.்.ப் இந்துஸ்தான் 1770 இல் அலெக்சாண்டர் கம்பெனியால் கல்கத்தாவில் ஆரம்பிக்கப்படடது. இத்தொழில் ஐரோப்பியர்களின் மேலாண்மையைக் கொண்டது. மேலும் பேங்க் ஆ.்.ப் பெங்கால் 1806,பேங்க் ஆ.்.ப் பாம்பே 1840, பேங்க் ஆ.்.ப் மதராஸ் 1843 ஆகியவை பிரசிடென்ஸி வங்கிகள் என அழைக்கப்பட்டன.

முதன்முதலில் இந்தியர்களால் ஆரம்பிக்கப்பட்ட வங்கி அவுத் கமர்சியல் வங்கி(1881). இது பஞ்சாப் நேஷனல் பேங்க் என 1894 இல் பெயர் மாற்றம் செய்யப் பெற்றது. இம்பீரியல் வங்கி 1921 இல் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தியாவின் ரிசர்வ் வங்கியானது 1934 ஆம் ஆண்டு சட்டப்படி 1935 இல் உருவாக்கப்பட்து. இது 1949 இல் அரசுடமையாக்கப்பட்டது. இது

வங்கிகளின் வங்கி என்று அழைக்கப்படுகிறது. இவ்வங்கி நாணயங்கள்,ரூபாய்களை அச்சிட்டு விநியோகிக்கிறது.(ஒரு ரூபாய் நாணயம் தவிர) ஒரு ரூபாய் நாணயத்தை இந்திய அரசின் நிதித்துறைச் செயலர் வெளியிடுகிறார். இவ்வங்கி அந்நிய செலவாணியைக் கட்டுப்படுத்தும். இதன் பழைய பெயர் பிரசிடென்சியல் வங்கி ஆகும்.

1969 ஆம் ஆண்டு 14 வணிக வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன. மீண்டும் 15 ஏப்ரல் 1980 இல் 6 வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன. இதில் நியு பேங்க் ஆ.்.ப் இந்தியா மிகப்பெரிய நட்டத்தைத் தழுவியதால் இதை பஞ்சாப் நேஷனல் பேங்க் உடன் இணைத்துள்ளனர்.

தற்போது மொத்தம் 19 தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் இயங்கி வருகின்றன.

இந்தியாவில் மிகப்பெரிய அளவில் அதிகக் கிளைகளை உடைய வங்கி ஸ்டேட் பேங்க் ஆ.்.ப் இந்தியா. இதனை 1921 அல் இம்பிரியல் வங்கி என்ற பெயரில் ஆரம்பித்தனர். இவ்வங்கி 1955 இல் நாட்டுடமை யாக்கப்பட்டது.

கிராம வளர்ச்சிக்காகப் பிராந்திய கிராம வங்கிகள் 1975 இல் ஆரம்பிக்கப்பட்டன. இதன் நோக்கம் கிராமப் புறத்தில் உள்ளவர்களைப் பொருளாதார ரீதியாக உயர்த்துவது ஆகும்.

1991 இல் புதிய பொருளாதாரக் கொள்கையின்படி தனியார் வங்கிகள் தொடங்க அனுமதி வழங்கப்பட்டது. முதலில் தொடங்கப்பட்ட தனியார் வங்கி இந்துஜா இந்த் பேங்க் ஆகும். பிறகு குளோபல் டிரஸ்ட் பேங்க்,டைம்ஸ் பேங்க், அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பேங்க் ஆகியன தொடங்கப்பட்டன.

தனியார் வணிக வங்கிகளும் தற்போது வணிக நடவடிக்கையில் உள்ளன. இதன் முதலீடு ரிசர்வ் வங்கி குறிப்பிட்ட தொகைக்கு மிகாமல் இருக்க வேண்டும். (உ.ம்) தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி, லட்சுமி விலாஸ் வங்கி, கரூர் வைஸ்யா வங்கி ஆகியன.

கூட்டுறவு முறையிலும் வங்கித் தொழில் நடைபெறுகிறது. இவ்வங்கி இதன் உறுப்பினர்களுக்கு மட்டும் சேவை செய்கிறது. இது மூன்றடுக்கு முறையைக் கொண்டு செயல் படுகிறது. அவை தொடக்கக் கூட்டுறவு வங்கி, மாவட்ட கூட்டுறவு

வங்கி, மாநில கூட்டுறவு வங்கி என்பனவாகும்

**பி.கலையரசு**

வணிகவியல்- இளங்கலை இரண்டாமாண்டு

## திம்மக்கா பாட்டி..



80 ஆண்டுகட்கு முன்பு பொட்டல் காடாக இருந்த கூதூர் கிராமத்தில் 20 கி.மீ சாலை நெடுகிலும் மரத்தை வளர்த்த திம்மக்கா பாட்டி..

## தமிழ்நாடு

- ❖மிக உயர்ந்த சிகரம் - ஆனைமுடி (உயரம் 2697 மீ )
- ❖மிக நீளமான ஆறு – காவிரி (நீளம் 760 கி.மீ )
- ❖நீண்ட கடற்கரை – மெரினா (நீளம் 13 கி.மீ )
- ❖மிகப்பெரிய தேர் - திருவாரூர் தேர் (200 டன்)
- ❖மிகப்பெரிய பாலம் - பாம்பன் பாலம்
- ❖மிகப்பெரிய கோபுரம் - ஸ்ரீவில்லிபுத்தூர்

**செ.உஷா**

தமிழ்-இளங்கலை முதலாண்டு

## ஜல்லிக்கட்டு..!

தமிழகத்தின் பழம்பெருமையோ ஜல்லிக்கட்டு
அதில் போகும் பல காளைகள் துள்ளிக்கிட்டு
வீரர்களோ அதை அடக்கக் காயம்பட்டு
வெல்வார்கள் பொன் பரிசுகளை அள்ளிக்கிட்டு…

**ஆர்.பிரதாப்**

தமிழ்-இளங்கலை முதலாண்டு

## பெற்றமனம்

எனக்கு இந்த உலகமே தெரிந்தது
உன்னை நான் பெற்ற பொழுது..
வானில்,
எத்தனையோ நட்சத்திரங்கள்
அதுபோல்
உன் மழலை மொழியில்
எத்தனையோ விசித்திரங்கள்..
உன் முதல் புன்னகையில்
என்னவொரு தெய்வீகம்..?

உன் புன்னகை வீசிய
வெளிச்சத்தில் தான்
என் வாழ்வின் பாதையோ..
என் முகம் கண்டுதான்
உன் பாவனைகள் அனைத்தும்..
ஆம்!
ஒரு குழந்தையின் சுமையில்
வாழ்க்கையின் அர்த்தங்கள்
பிறந்து விடுகின்றன..

**பி.பரிதா**
தமிழ்-ஆய்வியல் நிறைஞர்

## நிறங்கள்..

கருப்பு தான் பெரியது
இரவு முழுவதும் நான்தான்..
நீலம்தான் பெரியது
வானும் கடலும் நான்தான்..
பச்சைதான் பெரியது
பூமி முழுவதும் நான்தான்..
மஞ்சள்தான் பெரியது
பகல் முழுவதும் நான்தான்..
சிவப்புதான் பெரியது
உலக உயிர்களின்
ரத்தமே நான்தான்..!

**ரா.செல்வலட்சுமி**
தமிழ்-இளங்கலை இரண்டாமாண்டு

## கடந்த காலம்..

ஒன்றாகப் படித்த போது
புழுதி பறக்கும் சாலைகளில்
முகத்தில் மண் கலந்த காற்றடிக்க
சிரித்து மகிழ்ந்த காலம் எங்கே..?
இப்போது ஏ.சி.அறையில்
உட்கார்ந்து
மெயில் அனுப்பி உறவாடும்
நட்பு எங்கே..?
மீண்டும் அந்த நாட்கள்..?

**ப.வசந்தி**
தமிழ்-இளங்கலை முதலாண்டு

## கல்லூரிக் காலம்

கடல் போல் பரந்து விரிந்த
என் வாழ்க்கையில்
அலைபோல் வந்த
எனது கல்லூரிக் காலம்
அவ்வளவு இனிமையானது..
அலைஅலையாய்
நண்பர்கள் பட்டாளம்..
வாரி வழங்கியது
மகத்துவமான சகாக்களை..
மகிழ்ச்சியுடன் கழியவிருக்கிறது
எனது மீதமுள்ள
கல்லூரிக் காலங்கள்...!

**இ.மதுபாலா**
தமிழ்-இளங்கலை இரண்டாமாண்டு

## மணிமொழிகள்

ஒழுக்கம் என்பது ஒரு மரம்
புகழ் என்பது அதன் நிழல்
நிழலைப் பற்றியே அதிகம்
நினைக்கும் நாம்
மரத்தைப் பற்றி

*நினைப்பதில்லை..*
*பூமியில் புதையுண்டு கிடக்கும்*
*பல கோடி வைரங்களை விட*
*சிறு நெல்மணி உயர்ந்தது..*
*ஆம்*
*பசி ஏற்படும் போது*
*வைரத்தை உண்ண முடியாது...*
*நல்லவர்கள் செய்யும் உதவி*
*பூமிக்கடியில் இருக்கும் நீர் போல*
*பயிர் பச்சைகளை வளரச்செய்யுமே தவிர*
*ஒருபோதும் தன்னை*
*வெளிக்காட்டிக் கொள்ளாது...*

**ரா.யுவராஜ்**
*தமிழ்-இளங்கலை முதலாண்டு*

## செய்தி சொல்லும் சங்க நூல்கள்

- *குடவோலை முறை பற்றி (தேர்தல்) – அகநானூறு*
- *ஏழடி சென்று விருந்தினரை வழியனுப்புதல் பற்றி - சிறுபாணாற்றுப்படை*
- *நேரம் அறிய நாழிகை வட்டிலைப் பயன்படுத்தியமை - முல்லைப்பாட்டு*
- *கார்த்திகை தீபம் - (கார்நாற்பது)*
- *மௌரியர்கள்,நந்தர்கள் பதிவுகள் - அகநானூறு*
- *உண்ணும் முன் காக்கைக்குச் சோறிடும் பண்பாடு - பொருநராற்றுப்படை*
- *கடையெழு வள்ளல்கள் பற்றி - சிறுபாணாற்றுப்படை*
- *காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில் ஏற்றுமதி, இறக்குமதி நடந்தது பற்றி – பட்டினப்பாலை*
- *பாகர்கள் யானையோடு பழகியமை பற்றி - முல்லைப்பாட்டு*
- *பொன்னை உரைத்து மாற்றுப் பார்த்தமை - பெரும்பாணாற்றுப்படை*
- *இந்திரவிழா எடுத்தமை – சிலம்பு,மணிமேகலை*

**பா.சபிதா**
*தமிழ்-இளங்கலை முதலாண்டு*

## மூச்சுக்காற்று

*நட்பின் கூட்டுக்குள்*
*நாமெல்லாம் சிக்கிவிட்டோம்*
*நட்பு மட்டும்*
*இன்னும் சிக்காமல் உள்ளது..*
*எத்தனை வலிமை*
*நட்புள்ள வாழ்க்கைக்கு..?*
*அருமைதான்*
*மூன்றெழுத்தில்*

*இருந்து கொண்டு*
*மூச்சுவரை*
*நிறைகிறது...*

**ம.இந்துமதி**
*தமிழ்-இளங்கலை முதலாண்டு*

## தமிழும் அறிவியலும்

*கோள்களின் நிறம்,வடிவம்,இயல்பு போன்ற உண்மைகளை அறிந்து அதற்குத்தக்கவாறு தமிழ் அறிஞர்கள் பெயர் கொடுத்துள்ளனர்.*

- ✓ *செவ்வாய் - செந்நிறமாய் இருக்கும் கோள் (இக்கோளில் செம்மண் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது)*
- ✓ *வெள்ளி – வெண்மை நிறமுடைய கோள்(இக்கோளில் வெள்ளித்தாது இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. வெள்ளிக் கோள் ஞாயிறு தோன்றுவதற்கு முன்பே விடியல் காலையில் தோன்றும் அதனால் அதற்கு விடிவெள்ளி என்ற பெயருமுண்டு)*
- ✓ புதன் - புதிதாகக் கண்டறிந்த *கோள் (அறிவன் என்ற பெயரும் உண்டு)*
- ✓ *வியாழன் - வானில் பெரிய கோள் (வியா என்றால் பெரிய, நிறைந்த என்று பொருள்)*
- ✓ *சனி – சனிக்கோளுக்குத் தமிழில் காரிக்கோள் என்று பெயர். காரி என்றால் கந்தகம் என்று பொருள்.*

*தானே ஒளிரும் ஞாயிற்றை முதலிலும் அதன் ஒளியைப் பிரதிபலிக்கும் திங்களை அடுத்தும் வைத்து ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என வார நாட்களை ஏற்படுத்தி உள்ளனர்.*

***மூ.விக்னேஷ்***
தமிழ்-இளங்கலை இரண்டாமாண்டு

## *உழைப்பாளர் நாள்...*

*முதலாளி வர்க்கத்திடம்*
*முதுகு வளைந்து வேலை செய்யும்*
*தொழிலாளர்கள்*
*நிமிர்ந்து மூச்சுவிடக்*
*கிடைத்த நாள்..*
*உயர் அதிகாரிகளின்*
*ஓய்வு நாள்..*
*சாமானியனுக்கு..?*
*சாமத்தியமாகப் பிழைப்பவற்குத்*

*தேவைதான் இந்நாள்..*
*தினமும் செத்துச்செத்துப்*
*பிழைப்பவனுக்கு..?*
*விடுப்பு எடுத்தால்*
*வீட்டில்*
*அடுப்பு எரியாதே..!*

*இதுதான்*
*எங்கள் வாழ்க்கை எனும் போது*
*எதற்கய்யா*
*இப்படியொரு நாள்…?*


**கோ.நந்தகோபால்**
*உயிர்த்தொழில் நுட்பவியல்*
*இளங்கலை முதலாண்டு*


***அறநெறிச்சாரல் - 1***

## *தன் புகழை நிலைநிறுத்திக் கொள்ளுதல்*

*மனிதன் தன் வாழ்க்கையில் புகழின்றி வாழ இயலாது. ஏதாவது ஒரு வகையில் புகழோடு வாழ முற்படுவர். பாராட்டுக்கு மயங்காதவர் எவருமில்லை. அழகையோ, அறிவையோ, செயலையோ பற்றி ஒரு மனிதனைப் பாராட்டிவிட்டால் அவன் உச்சி குளிர்ந்து உள்ளம் மகிழ்ந்து தன்னிலை மறந்தவனாக மாறிவிடுவான். இதனைத்தான் ஐஸ் என்னும் பொருளில் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு தனக்குக் கிடைக்கக் கூடிய புகழை ஒருவர் எவ்வாறு நிலைநிறுத்திக் கொள்வது?*

*ஒருநாள் ஒருவர் ஒருவரைப் பாராட்டிவிட்டால் மீண்டும் மீண்டும் அந்தப் பாராட்டுக் கிடைக்க வேண்டும் என்று ஏங்குவர். ஆர்வம் கொள்வர். புகழ் போதையில் மயங்கிக் கிடப்பர். அப்புகழ் நிலைத்து நிற்க என்ன செய்ய வேண்டுமோ அதனைத் தொடர்ந்து செய்வர்.*

*தன் வீதியில் குடியிருக்கும் மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்று விரும்பிய கோகுலராமன் என்ற கவுன்சிலர் அனைத்து உதவிகளும் செய்து வந்தார். அவ்வீதி மக்கள் அவரைப் புகழ்ந்து பதாகைகள் ஒட்டினர். சிறுபிரச்சனையானாலும் அவரிடம்தான் மக்கள் செல்வர். அவரும் மனம் கோணாமல் மறுக்காமல் உதவிகளைச் செய்து வந்தார். அவரது புகழ் பக்கத்து ஊருக்கும் பரவியது. பிரபலமடைந்த இவர் ஓர் உணவு விடுதி திறந்தார். அங்கு உணவு உண்ண வருபவர்கள் அனைவரும் உணவு சுவையாக இருப்பதாகக் கூறிச் சென்றார்கள். அந்த உணவு*

விடுதியில் நாள்தோறும் புதிய உணவு வகைகள் பறிமாறப்பட்டன. அனைத்தும் சுவை மிகுந்ததாக இருந்தன. உணவு விடுதியால் கோகுலராமன் மேலும் மேலும் புகழடைந்தார்.

ஒருநாள் கோகுலராமனைத் தனியார் தொலைக்காட்சியிலிருந்து பேட்டி காண வந்தனர். அப்பேட்டியில் அவர் தன் உள்ளக்கருத்தைப் பதிவு செய்தார்

''நான் கவுன்சிலராக இருந்த போது எந்த வேலையை யாரிடம் கேட்டால் முடித்துத் தருவர் என்று கணக்குப் போட்டுக்கொள்வேன். அடுத்தநாள் அவரிடம் சென்று வேலையை முடித்துத் தரச் சொல்லிக் கேட்பேன். அவர்களும் முடித்துத் தருவர். அதே போல இந்த உணவு விடுதியிலும் புதுப்புது உணவுவகைகளைச் செய்து கொடுத்தேன். மக்களும் விரும்பினர். நானும் பிரபலமடைந்தேன். அது எப்படிச் சாத்தியம் என்று கேட்கிறீர்களா?

என்னிடம் வேலை செய்யும் வேலையாட்களுக்கு வாரந்தோறும் ஒருநாள் ரூ500 கொடுத்து விடுமுறையும் அளித்து விடுவேன். அப்பணத்தை வைத்துக் கொண்டு வேறொரு உணவு விடுதிக்குச் சென்று அங்குள்ள உணவு வகைளை உண்டு அறிந்து கொள்வர். பின் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருத்தராகத் தாங்கள் அறிந்தவற்றை என்னோடு கலந்துரையாடுவர். பின்னர் அவ்உணவு வகையினை எங்கள் உணவு விடுதியில் அறிமுகப்படுத்துவோம்.''

இவ்வாறு ஒரு மனிதன் தனக்கான புகழை நிலைநிறுத்திக் கொள்ள நாள்தோறும் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. காலப்போக்கில் கோகுலராமனுக்கு மாநில,தேசிய விருதுகள் தானாகத் தேடி வந்தன. புகழ் கிடைப்பது எளிது; அதனைத் தக்க வைத்துக் கொள்வதுதான் மிக அரிது.

**முனைவர் இரா.தேவணன்**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை

## நல்லவன்

என் தாய் என்னைக்
கருவறையில் தாங்காவிட்டால்
தரையில் நான்
தவழ்ந்திருப்பேனா..
என் தந்தை
வறுமை என்றெண்ணி
என்னை வளர்க்காமல்
விட்டிருந்தால் அறிவைப்
பெற்றிருப்பேனா?
நல்ல நண்பர்கள் கிடைக்காமல்
போயிருந்தால் நல்லவனாக
வாழ்ந்திருப்பேனா..?

*ரா.பிரதாப்*

*தமிழ்-இளங்கலை முதலாண்டு*

## உலகின் முதல் அழகு..

*கார்மேகமும்*
*உன் கருநிறமேனி கண்டு*
*காரணமின்றி களைந்து போகும்..*
*சுட்டெரிக்கும் சூரியனும்*
*வெட்டவெளி வெண்ணிலவும்*
*வெகுளித்தனமுள்ள*
*உன் அழகைக் கண்டு*
*வெளுத்துப் போகும்..*
*ஏழு வர்ணம் உள்ள வானவில்லும்*
*உன் புருவத்தைக் கண்டு*
*தனித்தனியே பிரிந்து போகும்..*
*பறந்து திரியும் பட்டாம் பூச்சியும்*
*திறந்து மூடும் உன் இமையைக் கண்டு*
*திசை தெரியாமல்*
*தொலைந்து போகும்...*
*பூத்துக் குலுங்கும் பூக்களும்*
*புதிதாய் பூத்த*
*உன் புன்னகையைக் கண்டு*
*புதைந்து போகும்..*
*மெதுமெதுவாய் பேசும்*
*உன் மழலைப் பேச்சு கண்டு*
*ஆரவார அலைகளும் அடங்கிப்போகும்..*
*உலகின் அத்தனைப்*
*பாடங்களையும்*
*இப்போது படிக்கிறேன்*
*பிஞ்சுக் குழந்தையின்*
*பூ முகத்தில்...!*

*சி.தருமன்*

*வணிகவியல்-இளங்கலை இரண்டாமாண்டு*

## பொது அறிவு..

*மகா பாரத்தின் உண்மையான பெயர்*

***ஜெய சம்ஹிதா***

*இந்தியாவின் நாவல் அகாடமி உள்ள இடம்*

***கொச்சி***

*தமிழ்நாட்டிலுள்ள அரசு நூலகங்கள்*

***2400***

*இலக்கியத்திற்காக அதிக பரிசு பெற்ற நாடு*

***பிரான்ஸ்***

*தமிழில் வெளிவந்த முதல் நாடக நூல்*

***ராஜ ராஜ விஜயம்***

*சி.திவ்யா*

*தமிழ்-இளங்கலை முதலாண்டு*

## பொது அறிவு...

***நம் உடலில் உள்ள மிகப்பெரிய உறுப்பு***

***கணையம்***

*ரூபாய் நோட்டில் எத்தனை மொழிகள் உள்ளன?*

***15 மொழிகள்***

*தண்ணீர் அருந்தாத உயிரினம் :* ***எலி***

*போரில் முதன்முதலில் ராக்கெட்டுகளைப் பயன்படுத்தியவர்?*

***திப்பு சுல்தான்***

*தேளின் இரத்தம் நீலநிறமாக இருக்கும்*

*வேர் இல்லாத தாவரம் :* ***இலுப்பை***

*பறவைகள் கூடு கட்டாத மரம் :* ***இலந்தை***

*விதையில்லாத பழம் :* ***அன்னாசி***

*கழுத்து இல்லாத உயிரினம் :* ***மீன்***

*கொசுக்களே இல்லாத நாடு :* ***பிரான்ஸ்***

*மனித உடலில் 72 ஆயிரம் நரம்புகள் உள்ளன.*

*மு.ஆதிபவானி*
*தமிழ்-இளங்கலை முதலாண்டு*

## விவசாயி

*விஞ்ஞானி இல்லையெனில்*
*உலகில்*
*விஞ்ஞான விந்தைதான் இல்லை*
*ஆனால்*
*விவசாயி இல்லையென்றால்*
*உலகில்*
*விடியலே இல்லை...*

***இ.ரஞ்சித் குமார்***
*வணிகவியல்-இளங்கலை மூன்றாமாண்டு*

## அழகு

*பரந்து விரிந்த வானழகு..*
*ஓங்கி உயர்ந்த மலையழகு*
*மலைமேல் துகிலென*
*விரிந்த வெண்மேகமும்*
*மார்கழிப் பனியுமழகு..*
*பறந்து திரியும் பறவைகளின் சிறகழகு..*
*குயிலின் சிறகழகு..*
*மயிலின் நாட்டியமழகு..*
*பிள்ளைப் பூக்கள் அழகு*
*பூக்கள் நாயகன் வண்டழகு*
*அழகினை ரசிக்கும்*
*மனிதன் அழகு..*
*மனிதனை நேசிக்கும்*
*வஞ்சகமில்லா மனமே*
*மனிதனுக்கழகு..*

***மு.மதுமதி***
*தமிழ்-இளங்கலை இரண்டாமாண்டு*

## ஞாபங்கள்..

*ஞாபகங்கள் அழிக்கப்படுவதில்லை*
*பிரிந்த பின்தான்*
*ஆழமாகப் பதிக்கப்படுகின்றன...*

***அ.பிரியா***
*வணிகவியல்-இளங்கலை இரண்டாமாண்டு*

## அன்றும் இன்றும்

*பசுமையான நாடு அன்று*
*பாதிக்கப்பட்ட நாடு இன்று*
*அன்பு குடிகொண்ட நாடு அன்று..*
*அதுவும் அழிந்துவிட்ட நாடு இன்று..*
*விழித்திடும் ஊக்குவித்தோர் அன்று..*
*இழித்திடும் ஊனமானோர் இன்று..*
*நடந்தே உயிர்வாழ்ந்தார்கள் அன்று*
*உயிர் வாழ்வதற்காக*
*நடக்கிறார்கள் இன்று..*
*பசிக்காகப் பயிர்விதைத்தான் அன்று*
*பணத்திற்காக மட்டுமே*
*விதைக்கிறான் இன்று..*
*விளைச்சல் நிலம் அன்று*
*விலைநிலம் இன்று!*
*உறவை மட்டும்*
*தேடி அலைந்தோம் அன்று*
*இனிமேல் உணவுக்காக*
*அலையப்போகிறோம்..*
*விதிகளை மீறினோம்*
*வீணாய்ப் போனோம்...!*

***இர.குமரேசன்***

தமிழ்-இளங்கலை இரண்டாமாண்டு

## நம்பிக்கை

உலகம் உருண்டை
அதைச் சுற்றிப் பார்க்க
நினைப்பதை விட
உலகம் தன்னைச்
சுற்ற வேண்டும் என நினை..
தோல்வி உன்னைச் சந்திக்கும் முன்
சற்றே நீ சிந்தித்தால்
தோல்வி உன்னைச் சந்திக்க
சிந்திக்கும்...
கனிந்த மரம்தான்
கல்லடிபடுமாம்...

***அ.பச்சியண்ணன்***
தமிழ்-இளங்கலை இரண்டாமாண்டு

## அ முதல் ஃ வரை

அம்மா அப்பாவின் பாசம் வேண்டும்
ஆசிரியர்களின் ஆசி வேண்டும்
இறைவனின் அருள் வேண்டும்
ஈகை செய்ய வேண்டும்
உண்ண நல்லுணவு வேண்டும்
ஊருணி நீர் போல் உதவ வேண்டும்
எல்லோரிடம் அன்பு வைக்க வேண்டும்
ஏற்றமிகு வாழ்வுபெற வேண்டும்
ஐயமின்றி கல்வி பயில வேண்டும்
ஒற்றுமையுடன் கூடி வாழ வேண்டும்
ஓங்கார பொருள் அறிய வேண்டும்
ஔடதமின்றி நல்வாழ்வு வேண்டும்
எஃகு போல் மனஉறுதி வேண்டும்

***ஆ.கிருஷ்ணகுமாரி***
தமிழ்-இளங்கலை இரண்டாமாண்டு

## கொங்குநாட்டு
## ஊர்ப்பெயர்கள்(அ,ஆ) - 1

அக்கரைப்பட்டி
அரசம்பட்டி
அரசமரம்
அந்தியூர்
அவிநாசி
அம்பத்தூர்
அரச்சலூர்
அருவங்காடு
அம்மாசிப்பாளையம்
அஹ்ரகாரம்
அத்தானி
அம்மாப்பேட்டை
அலமேடு
அண்ணாமடுவு
அயோத்திப்பட்டினம்
அண்ணாநகர்
அம்பாசமுத்திரம்
அத்திப்பட்டி
ஆண்டலூர்
ஆனங்கூர்
ஆத்தூர்
ஆலாம்பாளையம்
ஆயக்காடு
ஆட்டையாம்பட்டி
ஆவித்திப்பாளையம்
ஆயங்குடி
ஆப்பக்கூடல்
ஆடைக்காடு

**ச.கௌசல்யா**
தமிழ்-இளங்கலை முதலாண்டு

## தொழிலாளர் நாள்

சாமானிய மக்கள் முதல் பணக்காரப் பட்டியலில் முதலிடம் வகிக்கும் மனிதர்கள் வரைக்கும் உழைப்பு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது. உழைப்பு ஒன்றே ஒரு மனிதனை மனிதனாக அடையாளப்படுத்துகின்றது.

தேனீக்களும் எறும்புகளும் காலங்காலமாக உழைப்பிற்கும் சுறுசுறுப்பிற்கும் உதாரணமாகச் சுட்டிக் காட்டப் படுகின்றன. உயிரினங்கள் அனைத்தும் தங்களது வாழ்வாதாரத்தைப் பெருக்கிக் கொள்ள அல்லது உறுதிப் படுத்திக் கொள்ள உழைத்துக் கொண்டேயிருக்கின்றன.

உழைப்பின் மகத்துவம் உணரப்படுவதற்கு ஆண்டுகள் பல தேவைப்பட்டன. பல புரட்சிகள் தோன்றலாயின. சீர்திருத்தவாதிகளும் புரட்சியாளர்களும் உழைப்பாளர்களின் சுயமரியாதையைக் காப்பாற்ற முனைந்தனர். ஒரு நாட்டின் வளர்ச்சி ஒட்டுமொத்தமான கூட்டுழைப்பில்தான் உள்ளது என்பதை உணர்த்தினர்.

விவசாயம் பேணப்பெற்றது, உழைப்பாளர்கள் போற்றப்பெற்றனர். இத்தகைய சிறப்புடைய உழைப் பாளர்களை நினைவுகூரும் விதமாக உழைப்பாளர் நாள் ஒன்றினை மேலை நாடுகள் அறிவித்தன. அதுவே மே 1 ஆகும்.

பொலிவியா,பிரேசில்,பல்கேரியா, கேமரூன், சிலி, கொலம்பியா, கோஸ்டாரிகா, சீனா, கரோடியா, கியூபா, சைப்ரஸ், செக் குடியரசு, காங்கோ ஜனநாயக குடியரசு, டென்மார்க், டொமினிக் குடியரசு, ஈக்வடார்,எகிப்து,பின்லாந்து,பிரான்ஸ், ஜெர்மனி,கிரீஸ்,கௌதமாலா, ஹாங்காங்,ஹங்கேரி,ஐஸ்லாந்து, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜோர்டன்,கென்யா,லத்வியா,லூதியா னா,லெபனான்,மெசடோனியா,மடகாஸ் கர்,மலேசியா,மால்டா,மொரூசியஸ், மெக்சிகோ,மொராக்கோ,மியான்மர், நைஜீரியா,வடகொரியா,நார்வே,பாகி ஸ்தான்பனாமா,பராகுவே,பெரு, போலந்து, பிலிப்பைன்ஸ், போர்ச்சுகல், ரோமானியா, ரஷ்யா, சிங்கப்பூர், ஸ்லோவகியா, தென் கொரியா,ஸ்லோவேனியா,தென் கொரியா,தென்னாப்பிரிக்கா,ஸ்பெயின் இலங்கை,செர்பியா,சூரிநாம்,ஸ்வீடன், சிரியா,தைவான்,தாய்லாந்து,துருக்கி, உக்ரைன்,உகாண்டா,உருகுவே, வெனிசுலா,வியட்னாம்,ஏமன்,ஜாம்பியா ஜிம்பாப்வே ஆகிய நாடுகளில் மே 1 தேசிய விடுமுறை நாளாகக் கொண்டாடப்படுகிறது.

***உழைப்பாளர் நாள் நினைவாக…***